SOSA-I-M

# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஐந்து

நேரம்: 2 மணி

---

I. **அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **5 × 1 = 5**

1. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் வானியல் அறிஞர்

   அ) சர் ஐசக் நியூட்டன் ஆ) இரேனே லென்னக் இ) ஜேம்ஸ் வாட்

2. கரு மேகங்கள் வானில் திரண்டன ________________ மழை பெய்யவில்லை.

   அ) எனவே ஆ) ஆகையால் இ) ஆயினும்

3. அனுமதி – இச்சொல் குறிக்கும் பொருள் ________________

   அ) கட்டளை ஆ) இசைவு இ) வழிவிடு

4. ஒலிம்பிக் விளையாட்டில் சேர்க்கப்பட்டுள்ள கலை

   அ) சிலம்பாட்டம் ஆ) வில்வித்தை இ) ஏறு தழுவுதல்

5. திருக்குறள் ________________ நூல்களுள் ஒன்று.

   அ) பதினெண்மேல்கணக்கு ஆ) காப்பியம் ஆ) பதினெண்கீழ்க்கணக்கு

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 × 1 = 5**

6. ‘உலகப்பொதுமறை’ எனப் போற்றப்படும் நூல் ________________

7. ‘உழவுப்பொங்கல்’ பாடலை எழுதியவர் ________________

8. ஒரு சொல் இரண்டு முறைக்கு மேல் அடுக்கி வருவது ________________

9. ரைட் சகோதரர்கள் ________________ ஆம் ஆண்டு விமானத்தில் பறந்தனர்.

10. ரோஜாப் பூ சிவப்பு நிறத்தில் இருப்பதற்குக் காரணம் ________________ என்ற நிறமி உள்ளது.

II. **அ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** **4 × 1 = 4**

11. புவியீர்ப்பு  12. தனக்கென்று  13. நலனெல்லாம்

14. சிலம்பாட்டம்

**ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** **4 × 1 = 4**

15. சிறகு + அடித்து  16. வீடு + தோட்டம்  17. அது + இன்றேல்

18. தோட்டம் + கலை

**இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** **3 × 1 = 3**

19. வாழ்தல்  20. பழங்காலம்  21. பெருமை

**ஈ) பின்வரும் சொற்களுக்குத் தொடர் எழுதுக.** **2× 1 = 2**

22. திருவிழா  23. அறிவியல்

**உ) பொருத்துக.** **4 × 1 = 4**

24. ஐசக் நியூட்டன் - எழில்

25. சிறுவாரைக்கம்பு - நீவீர்

26. அழகு - மூங்கில்

27. முன்னிலைப் பெயர் - புவியீர்ப்பு விசை

III. **அ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடையளி.** **7 × 2 = 14**

28. மேகம் கறுப்பாகத் தோன்றக் காரணம் என்ன?

29. பறவைகள் திசைமாறிப் பறப்பதற்கு எது உதவுகிறது?

30. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை?

31. சிலம்பாட்டம் பெயர்க் காரணம் தருக.

32. சிங்கமுகக் கிணறு - குறிப்பு எழுதுக.

33. இணைப்புச் சொற்கள் எதற்குப் பயன்படுகின்றன?

34. உழவுத் தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

35. ‘பாதிப்பு‘ என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?

36. இரட்டைக் கிளவிக்கும், அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக.

**ஆ) பின்வரும் பாடலை அடிமாறாமல் எழுதுக.** 2 × 2 = 4

37. ‘நயனொடு’, ‘பண்பு உடையார்’ எனத் தொடங்கும் குறட்பாக்களை அடிமாறாமல் பிழையின்றி எழுதுக.

**இ) பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடை எழுதுக.** 1 × 5 = 5

38. “தமிழர் பண்பாட்டின் மகுடம் - உழவுத் தொழில்” - என்ற தலைப்பில் உழவுத் தொழில் பற்றிய கருத்துகளை ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

39. “தமிழர் கலைகள்” - பற்றி ஒரு பக்க அளவில் எழுதுக.

40. பிர்லா கோளரங்கத்தைச் சுற்றிப் பார்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்தல்.

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.** 10 × 1 = 10

41. Clouds, Effort - மொழியாக்கம் செய்க.

42. நாங்கள் கோடை லீவுக்கு டூர் சென்றோம். (மொழியாக்கம் செய்க.)

43. வன்னம், வண்ணம் - பொருள் வேறுபாட்டைக் கூறுக.

44. தாமரை - இச்சொல்லைப் பிரித்து இரு பொருள் தருக.

45. வள்ளி எழுதி முடித்துவிட்டாள். எழிலி எழுதவில்லை. (ஆனால் / ஆகையால்)
(சரியான இணைப்புச் சொல்லை இணைத்து எழுதுக.)

46. ஐந்திணை - (தொகைச் சொல்லை விரித்து எழுதுக.)

47. பல்கலைக்கழகம் - புதிய சொற்களை உருவாக்குக.

48. பாட்டி இங்கே பாருங்க சிங்கம் வடிவத்திலிருக்கும் இந்தச் சிற்பத்தின் வயிற்றிலே ஒரு வாயில் இருக்கிறதே என்றாள் கவிதா (தேவையான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.)

49. உலகம், அழகு - (ஒரு பொருள் தரும் பல சொற்களை எழுதுக.)

50. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.
(இக்குறட்பாவில் உள்ள எதுகைச் சொற்களை எழுதுக.)